Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. CC. 166 /2019

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5 , Page.No. 26/25**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சென்னப்பன் | **தொழில்** | விவசாயம் |
| **த/க பெயர்** | திரு. குப்பன் | **கிராமம்/ ஊர்** | சுண்டம்பட்டி |
| **வயது** | 55 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3,4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 27th day of November 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை–**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ..சா1 ரங்கசாமி எனது சித்தப்பா. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் அ.சா1ன் பக்கத்து வீட்டில் வசிக்கிறார்கள். அ.சா1க்கும் எதிரிகளுக்கும் இடையே வீட்டு இடம் சம்மந்தமாக உரிமையியல் பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 01.02.2019 அன்று காலை 07.30 மணிக்கு நான் பச்சூரிலிருந்து சுண்டம்பட்டி நோக்கி நான் வந்து கொண்டிருந்தபோது, அ.சா1 ன் வீட்டின் அருகே வைத்து எதிரிகள் 4பேரும் அவரை தாக்கி கொண்டிருந்தார்கள். எதிரிகள் நால்வரும் அ.சா1 ஐ உருகட்டையால் அ.சா1 ன் வலது கையின் விரல்களின் மீது தாக்கியதில் அவருக்கு எலும்புகள் நொறுங்கி விட்டன. அ.சா1 ன் கால் முட்டியில் இருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அ.சா1 ஐ அழைத்துகொண்டு நாட்றம்பள்ளி காவல் நிலையம் சென்றனே். அங்கு அ.சா1 னிடம் ஒரு கையொப்பம் வாங்கி கொண்டு மருத்துவமனைக்கு செல்லுமாறு அனுப்பிவைத்தார்கள். திருப்பத்துர் அரசுமருத்துவமனைக்கு கொண்டு வந்து அ.சா1 ஐ சிகிச்சைக்கு சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர். மேலும், 1,2 எதிரிகள் என்னை பார்த்து இந்த வழக்கு சம்மந்தமாக நீ சாட்சி சொல்ல சென்றால் உன்னை அடித்து ரயில் ரோடில் போட்டு விடுவோம் என்று மிரட்டினார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து எதிரிகள் என்னை மிரட்டினார்கள் என்றால் நாங்கள் மருத்துவமனைக்கு காயம்பட்டவரை அழைத்து செல்லும்போது மிரட்டினார்கள். எதிரிகள் என்னை மிரட்டியதற்கு பின்பு போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. அதற்கு முன்பே விசாரித்தனர். காயம் பட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அ ழைத்து செல்வதற்கு முன்பே போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். அப்போது காயம் பட்ட நபரையும்,போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. அப்போது அவர் அங்கு இல்லை. அ.சா1 க்கு காயம் ஏற்பட்டிருந்ததால் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றாலும், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரிதான். சம்பவம் பற்றி கேள்வி பட்டு தான் நான் சம்பவயிடத்திற்கு வந்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் நான் சாலையில் வந்து கொண்டிருந்தபோது தான் எதிரிகள் அவரை தாக்கி கொண்டிருந்தார்கள் என்று தான் தெரிவித்தேன். நான் வந்து பார்த்தபோது அ.சா1 க்கு ஏற்கனவே காயம் ஏற்ப்ட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் வரும் போது தாக்கி கொண்டிருந்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு வந்தபோது கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் அடிப்பட்ட நபரும் இருந்தார் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் ஒருவரையொருவர் தாக்கி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் இருந்த அ.சா1 க்கு விரல்களிலும், கால்களிலும் காயம் ஏற்பட்டிருந்தது எ்னறால் சரிதான். மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தற்கு பின்பு வேறு எங்கும் வைதது போலீசார் எ்னனை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். முதல் விசாரணையல் நான் தெரிவித்த விவரங்கள் நான் கையொப்பம் இட்ட தாளில் இருந்தன என்றால் சரிதான். அ.சா1 எனக்கு சித்தப்பா முறை ஆகும். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், அசா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness                                        Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |